

கழகத் தலைவர், முதல்வர் தளபதி அவர்கள் கலைஞர் கைவினைத் திட்டம் என்ற மாபெரும் திட்டத்தை துவக்கி வைக்க குன்றத்தூருக்கு வருகைத் தர உள்ளதை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி – மாணவர் அணி – மகளிர் அணி – தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் நிகழ்ச்சி ஏற்பாடுகள் மற்றும் வரவேற்பு குறித்து ஆலோசனை செய்தார். அருகில் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், எல்.பிரபு, மு.வே. ரவிச்சந்திரன், பி.கே.சத்தியபிரபு, உதயா கருணாகரன் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.



கழக தலைவர் அவர்கள் இன்று திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவிற்கு வருகை தருவதை அமைச்சர் சா.மு. நாசர் விழா நடைபெறும் இடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார். உடன் மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், எஸ்.சசிகாந்த்செந்தில் எம்.பி, ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ, ஆவடி மாநகராட்சி ஆணையர் ச.கந்தசாமி, ஆவடி காவல் ஆணையர் கே.சங்கர் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி செயலாளர்கள் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பல்லாவரம் தொகுதியில் ரூ. 110 கோடியில் கட்டப்பட்டுள்ள

# மாவட்ட அரசு மருத்துவமனை திறப்பது எப்போது?

## சட்டப் பேரவையில் – பல்லாவரம் இ.கருணாநிதி கேள்வி!

சென்னை,ஏப்.18-

பல்லாவரம் தொகுதி குரோம்போட்டை அரசு மருத்துவமனை - ரூ. 110 கோடியில் கட்டப்பட்ட மாவட்ட மருத்துவமனையாக எப்போது திறக்கப்படும் என்று தொகுதி உறுப்பினர் இ.கருணாநிதி கேள்வி எழுப்பினார், இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதம் வருமாறு:



**இ. கருணாநிதி:** பல்லாவரம் தொகுதி, குரோம்பேட்டை அரசு மருத்துவமனை 1973 ஆம் ஆண்டு 52 ஆண்டுகளுக்கு முன்பு தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது. அங்கு போதுமான வசதிகள் இல்லை. 3,000 புறநோயாளிகள் பயன் பெற்று வருகிறார்கள். அதன் அருகாமையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 110 கோடி ரூபாய் நிதி வழங்கி கட்டப்பட்டு வருகின்ற மருத்துவமனை, மாவட்ட மருத்துவமனையாக எப்போது திறக்கப்படும் என்பதையும், 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு தயார் நிலையில் இருக்கின்ற பல் மருத்துவமனை எப்போது திறக்கப்படும் என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் மா. சுப்பிரமணியன்:** நான் ஏற்கெனவே சொன்னதைப்போல 25 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் ரூ.1,018 கோடி செலவில் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அந்தப் பகுதியில் ரூ.110 கோடி செலவில் ஒரு பிரம்மாண்டமான மருத்துவமனை இன்றைக்கு அமையப்பெற்று பணிகள் இறுதி நிலையில் இருக்கிறது. மிகவிரைவில் மருத்துவ உபகரணங்களும், மருத்துவப் பணியாளர்களும் அதில் அமைக்கப்பட்டதற்குப் பிறகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வாயிலாக அந்த மருத்துவமனை பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது என்பதைத் தங்களின் வாயிலாக மன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



காஞ்சிபுரத்தில் தலைமை செயற்கு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார் ஏற்பாட்டில் பெரிய காஞ்சிபுரம் குஜராத்தி சத்திரம் நேற்று (17.04.2025)காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில்கடும் வெயிலில் மக்கள் தாகம் தீர்க்க மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ ஆலோசனைப்படி பழரசம் மற்றும் தர்பூசணி பழங்களை மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன் வழங்கினார். உடன் மாமன்ற உறுப்பினர் குமரவேல்,மாநகர மாவட்ட பிரதிநிகள் எஸ் .சேகர் .மாமல்லன் மற்றும் ஜே .வரதராசன். தேவராஜ், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய அவைத்தலைவர் எஸ்.மாரிமுத்து, மாவட்ட பிரதிநிதி பி.என்.ரவி, பழனிவேல், மனோஜ்,விஜி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### திருவள்ளூர் மாவட்டத்தில் அரசு விழாவில் பங்கேற்க

# கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வருகை!

## முன்னேற்பாடுப் பணிகளை – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பார்வையிட்டார்!

திருவள்ளூர் ஏப் 18;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவிற்கு இன்று வருகை தருவதை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் ஆண்டார்குப்பம் விழா நடைபெறும் இடத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் விழா நடைபெறும் இடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார்

பின்னர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் 18.04.2024 அன்று அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வருகைதர உள்ளார்கள். இவ்விழாவில் 202531 பயனாளிகளுக்கு ரூபாய் 357.43 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது. மேலும் ரூபாய் 390.74 கோடி மதிப்பீட்டில் 7369 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்ட உள்ளார்கள். அதேபோல் ரூபாய் 418 கோடி மதிப்பீட்டில் 6760 திட்டப் பணிகளை திறந்து வைக்க உள்ளார்கள். அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் பல்வேறு பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மேலும் பயனாளிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் தயார் நிலையில் உள்ளன. இது தவிர பொது சுகாதார துறை சார்பில் 10 நடமாடும் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 6 ஆம்புலன்ஸ் முன்னெச்சரிக்கைக்காக நிறுத்தி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 10 தீயணைப்பு வாகனம் தயார் நிலையில் நிறுத்தி வைக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. மேலும் பயனாளிகளை பாதுகாப்பாக அழைத்து வந்து திரும்பி அவர்கள் இல்லத்திற்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்ல அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் பயனாளிகளை அழைத்து வர 500 க்கும் மேற்பட்ட வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும், பயனாளிகளுக்கு தேவையான உணவு, குடிநீர் வழங்க உரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வாகனம் நிறுத்துவதற்கான பல்வேறு இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஆகவே விழா சிறப்பாக நடைபெற அனைவரும் அனைத்து பணிகளையும் சிறப்பாக மேற்கொள்ளப் பட்டு வருகிறார்கள் என மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அவர்கள் அறிவுறுத்தினார்கள் இதில் மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ.கோவிந்தராஜன், துரை சந்திரசேகர், ஆவடி மாநகராட்சி ஆணையர் ச. கந்தசாமி, ஆவடி காவல் ஆணையர் கே.சங்கர், ஆவடி காவல் துணை ஆணையர்கள் பாலாஜி, ஆவடி காவல் ஆணையர் கே.சங்கர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார், திட்ட இயக்குனர் ஊரக வளர்ச்சி முகமை வை. ஜெயக்குமார், மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி செயலாளர்கள் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்


